கரவெட்டி மேற்கு

நெல்லியடி

இளம் வீரன்

# ஆறுமுகம் அருள்மோகன்

# நினைவு மலர்




திருப் பதித் தலத்தை வாழ்நாள்
இருப் பதில் என்றும் போற்றி
விருப் பதில் வணங்கி னோனின்
அருப் பண மலர் இக் கைந்நூல்!

19-10-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தோற்றம் : 9-1-1969**

ஆறுமுகம் மைந்தன் அருள்மோகன் இவ்வுலகம்
பேறு பெற வந்து பிறந்த நாள் – ஆறொன்பான்
ஆண்டிந் நூற் றாண்டு முத லாம் மாதத் தொன்பது ! அந்நாள்
பூண்ட திந்த ஞாலம் புகழ்!

**மறைவு : 19-9-1994**

ஆயிரத்துத் தொள்ளா யிரத்துத் தொண் ணூற்று நான்கு
ஆய வருடம் செப் டெம்பரின் – தீய நாள்
பத்தொன் பதின் பௌர் ணமித் திதியே மோகனுககு
வைத்த விதி, காலன் வர!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் மோகன் வரலாறு

வடக்கிலங்கைக் கின்று வரலாற்றுப் புகழ் தீட்டு
திடக் குமரராம் வீர தீரர்களின் காலாந்தப்
பிறப்பிடமாய் விளங்குகிற பேர் பெற்ற திருத் தலமாம்,
சிறப்பிடமாய் அறிஞர் எலாம் குறிப்பிடு கின்ற வடமர்
ஆட்சிப் பிரதேசம்! ஆங்கே சில ஊர்கள்
மாட்சி பெற 'வெட்டி' என்ற மறப் பெயர்கள் ஈற்றினிலே
தொக்கி நிற்கும்! கரவெட்டி வல்வெட்டித் துறை என்று
மிக்க திமிர்ப் பாங்கினிலே மிளிரும் கிராமங்கள்
பெயர் கேட்ட மாத்திரத்தில் பீறி வரும் தீர உணர்வு
அயர்வென்ற சோர்வே அகன்று விடும் அக் கணமே!
அத்தகைய கரவெட்டி மேற்கிலே நெல்லியடி
மெத்தப் பழைமை மிகும் மேன்மைப் புகழ் வாய்ந்த
பேரூர்! அப் பேரூரில் பெருமைக் குடிசார்ந்த
சீரூறும் பெரியார் சிரேஸ்ட வரி மதிப்பாளர்
சண்முகம் ஆறுமுகம் சால்புறவே இல்லறத்தைத்
திண்ணியமாய்ப் பூரணமாயச் செய்யக் கருதியக் கால்
பூரணம் எனும் நாமம் பூண்ட பொற்கொடிச் சீர்
ஆரணங்கைத் தாரமாய் அடைந்து திரு மக்கள்
மூவர்களைப் பெற்றார்! மூத்த மகள் கோமதி ! ஆண்
ஆவலினைத் தீர்க்க வந்த அருள்நந்தியைக் காலன்
ஒன்பது மாதத்தில் உயிர் பறித்தான்! பொச்சத்தைத்
தின்பதற்கு வந்த மறு திருமகனுக்கு அருள்மோகன்
என்றே பெயர் சூட்டி இதயத்தில் முடி சூட்டி
நன்றே சீராட்டி நலம் எல்லாம் ஊட்டி மிகச்
செல்லமாய், ஒன்றே ஒன் றான இளம் ஆண் கன்றாய்
எல்லாச் சுதந்திரமும் இயல்பின் படி வாழும்
வெல்லம் போற் சுவையான விருப்பு வசதிகளும்
நல்கி அவனை ஒருநாரா யணன் போலே
வளர்த்தார்கள். பெற்றோர்! வாலிபனாகச் சுடர்ந்து
கிளர்ந்தெழுந்த அருள்மோகன் கில்லாடிப் பயலாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் விடுவான் என்று புறத்தார் பயந்தாலும்
சேய் அவனோ தன் முயற்சித் திறனால் தனித்துவமாய்ச்
சாதனைகள் ஈட்டும் சரித்திரனாய் ஆகி விட்டான்!
வேதனைகள் யாதும் விரவாமலே வளர்ந்து
விட்டு விடுதலையாய் வீரச் செயல்களிலே
மட்டும் முதிர்ந்து பிறர் மதிப்புக் குரித்தானான்!
அருள்மோகன் என்னும் தன் அரும் பெயரினுக்கு அர்த்தப்
பொருள் கூட்டுகின்ற உயர் பொற்புதல்வன் ஆகிவிட்டான்!
சின்ன வயது முதல் செயல்களிலே தனித் பாங்கும்
என்ன இடர் வரினும் எதிர்த்து மடக்குகின்ற
ஆண்மைத் தனமும் தன் ஆத்தாளுடனும் "அம்மா!
கீண்மைத் தனம் எனக்குக் கிடையாது!" என வாதம்
பண்ணி உயிரைப் பலி கொடுக்கவும் துணியும்
நுண்ணுணர்வும் கூர்ந்த நொசிப்பு மனம் உடையோன்!
அண்ணாவைப் போலவே ஆறும் மூன்றும் சேர்ந்த
எண்ணான ஒன்பதாம் மாதத்திலே, இவனும்
இறப்பான் எனச் சோ திடரும் வைத் தியரும்
குறைப்பாய் உரைத்தனைக் குறிப்பாய் நினை கூர்ந்து
தற்கொலைக்கும் மூர்க்கமாய்த் தலைப்பட்டு மாய்கின்ற
முற்புலவும் செய்திட்ட மூர்க்கத் தன ரோசன்!
அப்பனுக்கோ படு செல்லன், அம்மாவுக்கோ ஏதும்
தப்புப் புரிந்தாலும் சண்டித் தனம் காட்டும்
மூர்க்கன்; தவம் என்ற மூத்த மாமன் முன்னால்
மாத்திரம் தான் ஆள் மடக்கம்; மற்றும்படி கிறுக்கன்,
இன்னபடி சுயமாய் இயங்கிச் சுதந்திரமாய்ச்
சொன்னபடி கேளாமல் சுழன்று திரிந்தவனோ,
கொழும்பில் விவே கானந்தாக் கல்லூரியிற் கற்றுத்
தழும்பித் திருச்சிக்குத் தானே விரும்பிப் போய்ப்
படிப்பைத் தொடர்ந்தக் கால் பக்தி வசப்பட்டுத்
திருப்பதி முதலான தெய்வத் தலங்கள் எல்லாம்
தரிசித்து, கண்ணியத் தனங்களையே தனதாக்கி,
விரி சித்தனாகி, வெளிநாட்டில் தான் உழைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தில் கால் லட்சத்தைப் பகுத்துத் தமிழகத்து
வணக்கத் தலங்களுக்கும் மறு மார்க்க அந்தோனி
முனிவர் கழுத்தில் முடிக்க ஒரு தங்கத்
தனிச் சங்கிலிக்கும் தருமாறு அனுப்பிய சீர்த்
தருமக் குணத்தில் ததும்பி மிக மாறி விட்டான்!
வருமக் குணம் கனிந்து வளர்ந்து விட்டான் சாந்தன்! எனின்
ஐயையோ! யாரோ சுவிஸ் நாட்டான் தான் செத்து
மையப் பட முயன்று மாயக் குதித்து இவன் மேற்
பாய, அவன் உயிரைப் பாதுகாத் தாற்றித் தன்
காயத்தை அவனுக்கு கவசமாய் ஆக்கி விட்ட
அற்புதத்தை இக்கவியில் அடக்க முடியாது!
தற்கொலைக்கு முயன்றவனைத் தப்ப விட்டு, மோகன் உயிர்
அப்பிக் கொண்டோடி விட்ட ஆட்கொல்லிக் காலனை நாம்
எப் பதங்களால் சபிப்போம் என்றே தெரியவில்லை!
ஒன்பதாம் மாதம் ஒரு தடவை, பிற்பாடு
ஒன்பதாம் வயதில் ஒரு தடவை என் நியமன்
இரு தடவை முயன்றும் இயலாமற் போய் விட்ட
கருவ பங்கத்தாலே, களவாக இன்னொருவன்
உருவத்தின் உள்ளே ஒளிந்து வந்து பின் புறமாய்
அருள்மோகனைத் தாக்கி அறம் பிழைத்து விட்டானே!
மேம் பாலத்தேயிருந்து வீழ்ந்த சுவிஸ் நாட்டானும்
"ஓம்" பட்டோ காலனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டான்?
இல்லா விட்டால், தானே இறக்க விழைந்தோனைக்
கொல்லாமல் எவ்வாறு இக் குற்றம் எமன் புரிந்தான்?
புலம் பெயர்ந்து சுவிற்சலாந் தாரில் லவுசான் மா
நிலம் சேர்ந்து பிஸ்கட் நிறுவனம் ஒன்றில் கடமை
ஆற்றுகின்ற போதே, பந் தாட்டத் துறையினிலே
போற்றத் தகுந்த புதிய பல சாதனைகள்
ஈட்டி, அந் நாட்டில் இடம் பெற்ற பல கழகப்
போட்டிகளில் பிறரைப் புறம் கண்டு, சுவிஸ் நாட்டின்
நீல நட்சத்திர விளையாட்டுக் கழகத்தின்
மூல நட்சத் திரமாக முதன்மை பெற்ற மோகன்
மறைவுக்காய்த் தமிழர் கலை கலாசார ஒன்றியத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவாய் நடத்த நினைத்த பெரும் கலை விழா
தன்னை ஒத்தி வைத்த தன்மை ஒன்றே சான்றாகும்
பொன்னைப் போல் மோகனைப் புலம் பெயர்ந்தோர் போற்றுதற்கு!
போற்றுவோர் ஓரிருவர் என்றால் அவர்க்கு நன்றி
சாற்றி அமைந்திடலாம்! சங்கங்கள், கழகங்கள்,
தனியார் என் றோர் பெரிய சமூகமே மனம் குழைந்து
இனிய அனுதாப இதழ்கள் வெளியிட்டும்
நீத்தானின் பொன்னுடலை நேரே தன் நாட்டிற்குச்
சேர்த் திறுதிக் கிரியைகளைச் செவ்வன செய்விக்க
ஒத்தாசைகள் புரிந்தும் உதவியதை எண்ண எண்ண
முத்தாய் ஒளிர்ந்துயர்ந்த மோகன் மறையவில்லை –
வாழ்கின்றான் பல் பேர் மனதில் என்ற தேறுதலே
மூள்கின்ற துள்ளத்தில்! முகப்பில் சுவிஸ் பாஷைப்
பத்திரிகை பற்பலவில் படம் போட்டுச் செய்திகளும்,
மித்திரர்கள் சேகர், சிவா, குகன், பாபுராஜ்,
செல்வா, குணம், மதன், ஸ்ரீ, வே. நடராஜா
இல்லத்தாரும் கனடா இராகுலனும், லவுசானில்
உள்ள யாழ்ப்பாணக் கிரிக்கெட் கழகத்தார்,
செல்வனிலே பற்றார்ந்த பொன்னி நிறுவனத்தார்,
நொசத்தல் உதய சூரியன் ஆட்டச் சங்கத்தார்,
நிசத்தில் அருள்மோகன் நீத்தார் வரிசையிலே
சேரவில்லை என்றுளத்தில் சிந்திக்கும் பான்மையிலே
ஈரம் கசியும் இரங்கல் இதழ்களினை
வெளியிட் டிருப்பதனை மீட்டு வாசிக்கும் கால்
தெளிவாய்த் தெரிகிறது; செல்வன் மரிக்கவில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயம் மறைந்தாலும் கருணை மிகும் உள்ளத்தான்
சாயல் மறைவதில்லை! சரித்திரமும் மறையாது!
கருணை எனும் சொல்லுக்கே சான்றாய்த் திகழ்ந்தானாம்!
அருணன் போல் ஆங்காங்கே அல் இருட்டில் தவித்தோர்க்கு
ஒளியாய் மிளிர்ந்தானாம்! ஒவ்வொருவர் ஒவ்வொன்றாய்
மொழிகின்ற சம்பவங்கள் மூலம் அறிகின்றோம்
அருள்மோகன் என்கின்ற ஆத்ம விபூஷணனின்
கருணைச் செயல்களினை! காற்சட்டைப் பருவத்தும்
அப்படித் தானே அவனின் ஆளுமையைக் கண்டோம் நாம் !
தப்பாய் ஓர் இளம் பெண்ணைத் தறுதலைகள் இரண்டொரு பேர்
வக்கிரம் செயக் கண்டு வலிந்து சென் றவர்களுடன்
உக்கிரமாய்ப் போரிட்டு உதை கொடுத்து அச் சின்னவளை
மீட்ட அவன் செய்கையினை மீட்டி மனம் காண்கிறது!
"சூட்டிச்" சிறுவனாய்ச் சுடர்ந்த அந்தக் காலத்தும்
கருணை என்னும் சொல்லின் காத்திரத்தைத் தேர்ந்தவன் தான்
அருள்மோகன் என்ப தின்றே அர்த்தப் படுகிறது!
துஷ்ட நிக் கிரகமும் சிஷ்ட பரி பாலனமும்
ஒற்றைத் தத்துவத்துக்கு இரட்டைப் பக்கங்கள் என்ற
ஞானம் புரிந்து கொண்டே நடந்தவனின் போக்கை, இன்றே
ஊர் புரிந்து கொண்டோம்! இருபத்தைந் தாண்டுக்குள்
முழுமை மனித முதிர்ச்சி பெற்றுச் சென்றவனின்
செழுமை புரி யாதமைக்காய்ச் சீறி நாம் அழ வேண்டும்!
அல்லி அரும்புகையில் அதன் வீச்சை அறியாமல்
கிள்ளி எறியும் கிலிசை கெட்ட தமிழ்ச் சாதிப்
பாரம்பரியத்தைப் பழித் தழிக்க வந்தவனின்
ஈர மனச் செயல்கள் எத்தனையோ! அப்பாச்சி
செத்த பொழுதில் சிங்கப்பூ ரில் இருந்தோன்
நத்திப் பறந்து வந்து நண்ணித் தன் ஊருக்குப்,
போருக்கு மத்தியிலும் போய் அக் கிழப் பாட்டி
பேருக்குக் கிடந்த பெரு மனை விறாந்தையிலே
பாயும் விரிக்காமல் படுத்துக் கிடந்து விட்டுத்
தாயும் தகப்பனும் தடுத்ததையும் மீறி விட்டுச்
சீறி அழுது திரும்பி விமானத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறிப் பிற நாட்டுக்கு ஏகியவன் நாலாண்டாய்த்
தந்தை முகம் காணவில்லை; தாய் முகத்தை, உற்றாரைச்
சொந்தத்தைச் சோதரியைக் காணவில்லை; என்றாலும்
கசிந்து கசிந்துருகிக் காரியங்கள் செய்வதிலே
மசிந்தொரு நாளேனும் மனிதில் தளர்ந்த தில்லை!
காசனுப்புவான்! அதிலும் கட்டுப் பாடு! தனது
நேச அக்கா கோமதிக்கும் நெஞ்சகலா மக்களுக்கும்
தனியாக வங்கியிலே கணக்கு வைத்துப் புறம்பாகக்
கனிவாகக் கட்டளைகள் இட்டு, மிகத் திட்டமாய்க்
கருமங்கள் ஆற்றியவன்! "தை மாதம், அடுத்தாண்டு
வருவேன்! வரும் போதென் வளர்சிக்கென்று எப்போதும்
காரணமானோர்க் கென் கடமையெல்லாம் செய்திடுவேன்!
பூரணத்தம்மா, உனக்கும் பொன்னான தந்தைக்கும்
என்னென்ன செய்வதென்றோ ஏலவே யோசித்தென்
சின்ன மனதினிலே சிந்தித் திருக்கின்றேன்!
வருவேன்!" என்றே தகவல் வான் வழியே சொன்ன திரு
அருள் மோகனோ பின் அவசரமாய்ப் பேழையிலே
வந்து சேர்ந்தானே! வழி பார்த்துக் கிடந்தோர்கள்
நொந்து நொந்து நைந்து நைந்து நுடங்கி விட வைத்தானே!
இங்கே இருக்கையிலே இருந்த இளமைச் செருக்குப்
பங்கப் படாமல் அங்கும் பாலித்து யாருக்கும்
வணங்கா முடியாக வாழ்ந்தவன் ஓர் பெட்டிக்குள்
பிணங்கிக் கிடப்பதனைப் பேதை உறவினர்கள்
பார்த்துப் பார்த்தேங்கிப் பரதவிக்கச் செய்தானே!
நேர்த்தி வைத்து நேர்த்தி வைத்துக் காத்தருள் எம் கண்ணை என்று
தோத்திரித்த பெற்றோர்க்குச் சூழ்ச்சி செய்த ஈசனுக்கு
நேத்திரங்கள் கிடையாதோ? நேசன் அருள் மோகன்
பாத்திரம் போல் இன்னோர் படைப்பை இயற்றுகின்ற
காத்திரத்தைப் பிரம்மன் இனிக் காண்பானோ? செல்வனே!
போய் வா! உனைப் போல் புனித மகன் இன்னொருவன்
வாய்வான் சண்முகம் ஆறு முகத்தார் குலத்தில் என்றும்
நீயே இவன் உருவில் நிலத்தில் உற்பவித்துத்
தீயே கருக்கி விடும் திடலில் மறுபடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

∴ பீனிக்ஸ் பறவை பிறப்பது போலே உயிர்த்து
நானிலத்தில் மீண்டும் நலங்கள் பல ஓம்பி
வாழ்வாய் என்றும் நம்பி வணங்கி விடை பெறுவோம்!
ஊழ் வாய்க்கெம் உத்தரவு, ஒரு நாள் பலிக்குமடா!

**தகப்பனார் சண்முகம் ஆறுமுகம் இரங்கல்**

கால் நூற்றாண் டாய் உன்னைக் கண் போலப் பேணி வளர்த்து
ஆல் போற் பராமரித்த அப்பனடா! – நூல் போல்
தறியில் உலை பட்டுத் தவிக்க எனை விட்டுப்
பொறியில் எமன் கைப்பட்டுப் போனாய்! – அறிவிழந்த
பித்தனைப் போலே நான் பிரலாபித்தே அரற்ற
வைத்துப் பறந்தாயே! வா மகனே! – கைத் தாங்க
ஓரே ஒரு மைந்தன் உள்ளாய் எனக் கருதித்
தேரேறிச் செம்மற் திமிரேறிக் – காரேறி
வானில் முகிலாய் வலம் வந்த அப்பன் எனைக்
கானில் விழுத்தி விட்டான் காலனடா! – தேனில்
குழைத்தமுதம் ஊட்டும் குரலில் அப் பா என்று
அழைக்க ஆண் பிள்ளை இல்லை ஆனேன்! – பிழைத்தினி நான்
வாழ்வதற்கு நீ வேண்டும் ! வாடா அருள் மோகன்!
வீழ்வதற்கு என்னை விடாய்!

**தாயார் பூரணம் இரங்கல்**

"இரடா" என் றால் இருப்பாய்! என கட் டளையைச்
சிரம் மேற் சுமந்தும் சிணுங்குவாய்! – அரம் போலக்
கூர்மைக் குணத்தோடு கோபிப்பாய்! ஆனாலும்
சீர்மை குலையாமற் சேவிப்பாய்! – நேர்மைக்கு
இலக்கண மானாய்! எனை உன் மனத்துள்
வலக் கரமாய் வந்தித்தே வாழ்ந்தாய்! – சிலப் போழ்தில்
ஏசி உனைக் கண்டிப்பேன்! என்றாலும் தாய் நெஞ்சின்
நேசிப் புணர்ந்து நெகிழ்வாய் நீ! – ஆசித்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை ஆளாக்க நான் உன்னி முனைந்ததால்
கண்ணே! கடிந்தேன்! கடைசியிலே - எண்ணி எண்ணித்
தீர உணர்ந்தென்னைத் தெய்வமாய்ப் பூசித்தாய்!
ஆரத் தழுவி உனை அன்பொழுகப் - பூரித்துப்
போஷிக்க என்றே பொறுத்திருந்தேன் நாலாண்டாய்!
பூசித்த தெய்வங்கள் பொய்ப்பித்தார்! - காசிக்குப்
போனாலும் கர்மம் தொலையா தென்பார்! போகேன்!
நானாறித் தேற நமன் வந்து - கூனாக்கும்
நாள் எண்ணி நைந்து குமைந்து நலிகின்றேன்!
வாழ்வெனக்கேன் நீ இல்லா மல்?

**சோதரி கோமதி இரவீந்திரநாதன் இரங்கல்**

அக்காள் எனக்கொரே அக்காள் அக்காள் என்றே
எக்காலும் போற்றி இதயத்தால் - சொக்கிப் போய்
சுற்றி வரித்த உயிர்ச் சோதரனே! என் மக்கள்
பற்றில் திளைத்த மெய்ப் பாசத்தின் - வற்றாத
ஊற்றே! பெற்றோர்க்கும் ஒளித்தொளித்து நேராய் என்
பேற்றுக் குதவிய நற் பேராளா! - சீற்றம்
அடையாமல் உன்னுடைய அத்தானையும் பண்பு
உடையாமலே மதித்த உத்திக் - கொடையாளா!
தம்பி! இன்றோ இத் துயரத் தாரணியிலே தனித்தேன்!
நம்பிக்கை அற்றேனே நான்!

**மைத்துனர் செ. இரவீந்திரநாதன்**
[கட்டிடத் திணைக்களப் பொறியியலாளர்] **இரங்கல்**

அக்காளைத் தொட்டுனக்கு அத்தானாய் ஆகுங்கால்
ஒக்க உன் ஆண்மை உணராமல் - மிக்க
சிறியனாய் எண்ணியதைச் சிந்தித்தே இன்றைக்கு
அறிவறிந்து நொந்தேன் கண்ணா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சோதரி கோமதி பெற்ற மருமக்கள் விபுலன், அபிலன் இரங்கல்**

அம்மாவின் மூலம் அறிந்தோம் மாமா, உனைப் போல்
பெம்மான் ஒருவன் பெரும் ஆற்றல்! - நம் ஆசை
உன்னைப் போல் வீரம் உறுதல்! மேலே இருந்துன்
கண்ணைப் போலே எம்மைக் கார்!

**உடன் பிறவாச் சோதரர்கள்**

தாய் வழி — கண்ணன், லதா, சுஜாதா, சுபாஷினி, சிறி, பவா, சிவா, சுரேஸ், அள்ளை

தந்தை வழி — சிவகுமாரன், நந்தகுமாரன் சாந்தா, சத்தியா, யோகா, ஞானா, பாஸ்கரன், பிரபா, கிருபா, கீதா, வனிதா இரங்கல்.

சொந்தச் சகோதரரும் சோடாகார் என்று நிதம்
வந்திக்குமாறு வழி காட்டிச் - சிந்தைக்கு
இனியவனாய் வாழ்ந்த இளமைப் பெருமான்
கனிய முன் காய் கவர்ந்த காலா - தனியாக
வந்தெம் முன் போராடும் வன்மை இலாய்! கோழை! எமைச்
சந்திக்க வாடா! சவால்!

**மைத்துனர்மார் சண்முகநாதன், இராமநாதன், சிவநாதன், லோகநாதன், குகநாதன், சந்திரா இரங்கல்**

"மச்சான்" இனிக்கும் மதுரப் பதம்! அதற்கே
அச்சான எங்கள் அருள்மோகன் - பொய்ச் சாவைக்
கொள்ளோம் மனதில்! குடியிருக்கின் றான் எங்கள்
உள்ளத்தில் என்றும் உயிர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெரிய தகப்பன்மார் கிருஸ்ணபிள்ளை, நடேசன், திருநாமம், சிறிய தகப்பன் சுகுணராஜன்,பெரிய தாயார் இராசம்மா, வேதாத்தை, சிதம்பரம் சிறிய தாயார் ஈஸ்வரி, மாமனார் கிருஸ்ணபிள்ளை மற்றும் உறவினர் இரங்கல்**

எங்கள் குலத்துக்கு எறி சுடராய், வளர்கின்ற
திங்களாய்ப் போற்றித் திளைத்த அருட் - சிங்கத்தை,
மோகனைப் பிஞ்சில் முறித்த விஷக் காலனே!
சாகடிப்போம்! வாடா! சவால்!

**தேற்றம்**

எத்தனை பேர் சேர்ந்து சவால் இட்டாலும் காலன் எனும்
பித்தனுக்குச் சூடு சுரணை எனும் - சித்தத்
தெளிவொன்றும் சாராது! தெய்வம் வகுத்த
வழி மீற யார்க்கும் வக் கில்லை! - துளி தீரக்
கண்ணீரைச் சிந்திடினும் காரியத்தை மாற்றிடுதல்
ஒண்ணாது மானிடரே! உய்த் துணர்ந் தெம் - விண்ணாணப்
பேச்சை விட்டுத் தர்ம விதி பேணி நடப்போம்! இறுதி
மூச்சை விட்டுப் போகும் முனர்!

ஆக்கம் -
சில்லையூர் செல்வராசன்
49/7, வைவ் வீதி,
கொழும்பு - 5.
தொலைபேசி - 583969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி இதழ்கள்

## கண்ணீர் அஞ்சலி

ஆறுமுகத்தின் அன்பு செல்வமே
அதிர்ச்சி ஒன்று கேட்டதடா!
பூரணத்தின் நட்சத்திரமே

பத்து மாதம் பெற்றெடுத்த
இந்த பூரண நிலவு
பூரணமாய் ஒளிப்பதற்கு
நீயும் காரணமோ?

எல்லோரும் நேற்றுவரை
உனது நண்பர்கள்
இன்றோ பரிதவிக்கவிட்டுவிட்டு
பாரறியப் போனனீயோ?
மோகன் என்று சொல்லி
மோகனா என்று நினைத்து
சீரிய செயல் பல செய்து
செந்தமிழ் நாட்டினிலே

பல கலைகளையும் கற்று அறிந்து
நீ பனைமரம் போல்
ஈழத்தில் அறியாதோர் யார்?
உன்னைப் பெற்ற வயறு அல்ல
அறியாதோர் யார் உளரேர்?

அயலோர் அண்டையோர்
அண்மித்த நண்பர்கள் எப்படி
ஐயா கூறுவது.
எல்லோரும் இங்கு வந்து
உன்னைப்பார்க்க நிற்கும்
வேளையிலே
கலங்கரை விளக்கே
அலறித்துடித்த புழுப்போல்
இருக்கின்றோம்
போதுமோ!

நீ வந்து விட்டாய்
வரவு தந்து விட்டாய்
அம்மாவுக்கு ஆறுதல்
தந்து விட்டாய்
இப் பூமி தனில் இறப்பது நியதி

உன் ஆன்மா சாந்தி அடைய
ஆண்டவனை
பிரார்த்திக்கும்......

**வே. நடராஜா குடும்பத்தினர்**
41, பாபர் வீதி,
கொழும்பு – 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

உன் அழகு முகம் ஆறுமுகம் மகன்
நின் திருமுகத்தை பூரண அக்காவின்
உள்ளத்தில் கண்டேன்.
உன் குணத்தை கேள்விப்பட்டேன்.
நின் தந்தை ஆறுமுகத்தின் தயவான
உள்ளத்தில் கனவு கொண்டாய்.
உன் அறிவை அறியவில்லை அறியாதோர்
நின் அறிவை கோமதி அக்காவின்
மதிநுட்பத்தில் கண்டுகொண்டேன்.
ஏனடா நீ எல்லோரையும் ஏமாற்றி ஓடிவிட்டாய்.

உனது ஆத்மா சாந்தியடைய
குடும்பத்தாருடன் இணைந்து எனது
குடும்பத்தாரும் உளபூர்வமாக வேண்டி நிற்கிறோம்.

தெட்சணாமூர்த்தி இராஜேந்திரன்
தபாலதிபர், 89, ஜோர்ஜ் ஆர் த சில்வா மாவத்தை,
கொழும்பு – 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 09 | | 19 |
| 01 | | 09 |
| 1969 | | 1994 |



செல்வன்

## ஆறுமுகம் அருள்மோகன்.

*19.09.1994 அன்று லவுசான் மாநிலத்தில் அகால மரணத்தை தழுவிக்கொண்ட எங்கள் அன்புச்சகோதரன் அருள்மோகனின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.*

அன்பிற்க்கும் பண்பிற்க்கும் பாசத்திற்க்கும்
ஒளிவிளக்காய் பிரகாசித்து நின்ற
எங்கள் மோகன் ஒரு நொடியில்
எங்கள் எல்லோரையும் விட்டுச் சென்றதேனோ!
உன்னை நித்தம் நித்தம் நினைத்து
எங்கள் இதயம் துடிக்கிறதே,
நீ எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உன் பாச நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில் என்றும்
மறையாது வாழும்.

82/2/47, ஸ்ரீ இராமநாதன்
தொடர் மாடி.
கொழும்பு - 13.

அன்பு நண்பர்கள்
நொசத்தல் உதயசூரியன் விளையாட்டுக் கழகம்.
2300, La Chaux De Fonds.
039/288325.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலங்கரை தீபமொன்று கண்ணீர் அஞ்சலியில்



ஆறுமுகம் அருள்மோகன்

இலங்கையில்
ஆண்டவன்
தந்தது
09.01.1969

சுவிற்சலாந்தில்
காலன்
பறித்தது
19.09.1994

## நீல நட்சத்திர விளையாட்டு கழக வீரன்

அமைதியாய் அடித்துக் கொண்டிருந்த
அந்த தென்றல் காற்று.....அதிர்ச்சியில் அசையாது
ஒரு கணம் நின்று போனது.
முகில்களிடையே ஒழித்து
விளையாடிக்கொண்டிருந்த
தண்மதி முழுமையாய் மறைந்து போனது.
✳
கடல் அலையும், பாடும் பறவையும்
பரிதாபமாய் ஒலி எழுப்பின
நேற்றுவரை எம்முடன் சிரித்து நின்ற
அந்த சின்ன விழிகள் இன்று
இமைக்காது இறுகி விட்டன.
✳
காவிய நாயகனே! எங்கள் அருள் மோகனே!
நீ எங்கே போனாய் ?
செந்தமிழ் செல்வனே! சீரிய செயல் வீரனே!
இன்று நாங்கள்...ஐயோ...ஐயோ...என்று
உன்னை அழைக்கின்றோம்.
வர மாட்டாயா...மோகனே!...நீ வர மாட்டாயா? ஒ...
என் செய்வோம்
வெட்ட வெட்ட தளிர்க்கும் தளிர்போல்
நீ இருந்திருக்க கூடாதா?
அப்படி இருந்திருந்தால் உன்னை
நாம் மீண்டும் பார்த்திருக்க கூடுமல்லவா?
✳
உன்னை பெற்ற வயிறு இன்று........
முடியாது... அதை... எம்
வார்த்தைகளால் சொல்ல முடியாது.
ஏற்றி வைத்த மெழுகுவர்த்தி நீ
இன்று எரியாமலே உருகி விட்டாயடா.
பக்கமதில் நீயிருந்து எம்முடன்
பல கதைகள் பேசியிருந்தாயே !
பள்ளிச் சிறுவனைப்போல்
பாய்ந்தோடித் திரிந்திருந்தாயே !
இன்று... நீ... எங்கே போனாய் ?
வா... மோகா...வா.

இறப்பு என்பது நிஜம் ஆனால்...
உன்னைப் பொறுத்த வரை... அது பொய் !
எங்களுடன் இன்றும் இருக்கின்றாய்... மோகா !
முடியாது... உன்னை... உன் விழிகளை...
அந்த சிரிப்பொலியை...
நீ விளையாடி மகிழ்ந்த இந்த
விளையாட்டு மைதானங்களை...
எப்படியடா மறக்க முடியும் ?
✳
யமனுக்கு இரக்கமில்லையா ?
விதிக்கு வெட்கமில்லையா ?
காலத்திற்கு நேரமில்லையா ?
உன் கனிவான பார்வைக்கு
மறு பிறப்பில்லையா ?
வந்து விடு மோகா... வந்து விடு...
✳
பிளந்து கிடக்கும் எங்கள் இதயங்களை
இணைத்துவிட வந்து விடு.
சோர்ந்து போய்க்கிடக்கும்
எங்கள் உடல்களை துடிப்பாக்க வந்து விடு.
அழுதழுது மரத்துவிட்ட எம் விழிகளுக்கு
உணர்ச்சிதனை தந்துவிட வந்து விடு.
✳
ஓ... தெய்வங்களே... எம்மை விட்டு.
ஏன் எம் செல்வத்தை பிரித்தீர்கள் ?
அப்படி என்ன ஆவல் உங்களுக்கு ?
இந்த பிஞ்சு பாதம்தனை
இப் பூமிதனில் பதிய விட உங்களுக்கு
விருப்பின்றி போனதேன் ?...
✳
ஆனாலும் மோகா!... நீ வருவாய்...
இந்த மண்ணில் மீண்டும் பிறப்பாய்
பிறந்து எம்மோடு விளையாடுவாய்...
அது வரை எங்கள் கண்கள்
கண்ணீரை உனக்கு என்றும்
காணிக்கையாக்கிக் கொண்டிருக்கும்.

*நீல நட்சத்திர விளையாட்டுக் கழக நண்பர்கள் - லவுசான்.*

அருள்மோகன்அருள்மோகன்அருள்மோகன்அருள்மோகன்அருள்மோகன்அருள்மோகன்அருள்மோகன்அருள்மோகன்அருள்மோகன்அருள்மோகன்அருள்மோகன்அருள்மோகன்அருள்மோகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி.

மலர்வு
09
*
01
*
1969





உதிர்வு
19
*
09
*
1994

## செல்வன்

## ஆறுமுகம் அருள்மோகன்.

**19.09.1994 அன்று வைசரன் மாநிலத்தில் அகால மரணத்தை தழுவிக்கொண்ட எங்கள் அன்புச்சகோதரன் அருள்மோகனின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.**

வாலிப வயதினில் நீ வளர்த்த
கனவுகளெல்லாம் மறைந்துவிட்ட சூரியனைப்
பாதியில் மறைந்தியர் வாட்டுதையா எம் உயிரை
மாசற்ற மனமுடையோய் மறைந்ததேன் மாமணியே
மாண்டதுயர் தாங்காது கலங்கி நிற்கிறோம் சுவிஸ்லாந்தில்
கவலையோ குறையவில்லை கண்ணீரோ காயவில்லை
சிரித்த உன்முகம் காண சிந்தை துடிக்கிறதடா
உன் நினைவும் என் கனவும் [illegible]

இறைபதமும் இறைவனில் நீர் இணைந்திட
இறைவனை இறைஞ்சுகின்றோம் மோகனா

நினைவில் நிறைவு [illegible]
எம். பாபுராஜ்

SEKAR TAMIL PRINT -JURA .039/512508.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

To the family of
Arulmozhi Arumugam.

Here, in Europe, when a child dies often we read in the obituary notice "there is an angel more in heaven". I don't want any misunderstanding, our beloved friend was not childish. But a kind of angel indeed. His eyes were a part of ever blue sky, a window open to heaven, his face, always beaming with goodness and kindness was a sunray. And if you know some aspects of our Christian religion (as myself I have come to know about your religion, in all these years with Tamil students, acquaintances, pals and friends), you know the sense of the word "child" and "childhood" in the Gospel. "Blessed those who are like children". Those who are pure, who don't do or think or say any evil, who know how to make a joy of the simplest

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

or say any evil, who know how to make a joy of the simplest things, who are naturally a source of joy and happiness for others around them. this is how I have always felt about Arulmogan, this is why, today, I am so sad about his passing away. But, really, if there can be one only consolation even for us, it is to know that he is happy in Heaven, that really, today, there is one angel more in Heaven.

With best regards to all members of Arulmogan's family who might read this,

Denis HELFER
COUR 51
1007 LAUSANNE
SWITZERLAND

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அன்னையின்
மடியில்
*09.01.1969*

மண்ணின்
மடியில்
*19.09.1994*

செல்வன்

## ஆறுமுகம் அருள்மோகன்.

*எங்கள் இனிய நண்பனே! அருள்மோகனே!*
*என்று இனி நாம் உன்னை காண்போம்.....*
*எம் மீது ஏன் இக்கோபம் காலனுக்கு... நண்பா!.*
*எம் இதயங்களை ...செங்கோல் கொண்டு பிளந்து விட்டானே...*

*எம் இனிய நண்பா ! எம்மை விட்டு ஏன் சென்றாயோ....இல்லை.*
*எம்மை விட்டு நீயாகப் போகவில்லை.. விதி. நண்பா! கொடிய எம் விதி...*
*எம் விதி எம்மை விட்டு உன்னை பிரித்தது. நண்பா !*
*எம் கொடிய விதி எம்மை விட்டு எம் மோகனை பிரித்தாலும்......*

*எங்கள் மோகனே ! எம்மை விட்டு நீ போகலாம்...ஆயினும்...அருமை நண்பா !*
*எம் நெஞ்சிருக்கும் வரை.........உன் இனிய நினைவிருக்கும்.*
*என்றும் இப்புவிதனில் உன் இனிய நினைவிருக்கும்*
*எம்மிதயங்களில் உன் பூமுகம் நினைவிருக்கும்.*

## இறுதி அஞ்சலி

*19.09.1994. அன்று எம்மை விட்டுப் பிரிந்த எமது ஆருயிர் நண்பன்*
*ஆறுமுகம் அருள்மோகன் அவர்களின் பூதவுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக*
***22.09.1994 வியாழக்கிழமை அன்று காலை 8.00 மணி முதல் 10.00 மணி வரை***
**Av de Montoie-3, Lausanne. (Maladiere)**ல்அமைந்துள்ள மண்டபத்தில் வைக்கப்படும்.
*அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.*
*Lausanne புகையிரத நிலையத்திலிருந்து MALADIERE நோக்கி செல்லும் 1 ம் இலக்க பஸ்வண்டியில் MALADIERE என்ற தரிப்பிடத்தில் இறங்கவும்.*
*St-Francois இல் இருந்து MALADIERE நோக்கி செல்லும் 4 ம் இலக்க பஸ்வண்டியில் MALADIERE என்ற தரிப்பிடத்தில் இறங்கவும்..*


*JAFFNA CRICKET CLUB LAUSANNE*

*Rue de Midi 1,1020 RENENS.*
*021/ 635 72 15*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி.

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 09 |  | 19 |
| * | | * |
| 01 | | 09 |
| * | | * |
| 1969 | | 1994 |

**செல்வன்**

## ஆறுமுகம் அருள்மோகன்.

**19.09.1994 அன்று லவுசான் மாநிலத்தில் அகால மரணத்தை தழுவிக்கொண்ட எங்கள் அன்புச்சகோதரன் அருள்மோகனின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.**

பசுமை மாறாத இளமைக் கனவுகள்~துளிர்விட்டு
காயாகிக் கனியுமுன்னே காலன் கண்பட்டு
அகால மரணத்தை நீ தொட்டாய்~மோகன்!
உன் நினைவுகள் இன்றும் எங்கள் கண்களில்
கண்ணீராய் பிறக்கவைத்தாய்.
இன்னொரு காலையில்,இனியொரு வேளையில் நீ
எம்மிடம் வந்து உதிப்பாய்.

Rue des Jardins 10
1018,LAUSANNE,
SWITZERLAND.
Tel:021/6461523
039/512508.



என்றும் உன் பிரிவால் வாடும்
ROOM நண்பர்கள்
சிவா,குணம்,செல்வா,
ஸ்ரீ,மதன்,மற்றும்
மச்சான் சேகர்
உறவினர் ,நண்பர்கள்.

Sekar Tamil Print-Jura -039/512508.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி.



சாவே உனக்கொரு நாள்
சாவு வந்து சேராதோ!
சஞ்சலமே நீயுமொரு
சஞ்சலத்தை காணாயோ!
தீயே உனக்கொரு நாள்
தீ மூட்டிப் பாரோமோ!
தெய்வமே உன்னையும் நாம்
தேம்பி அழ வையோமோ!
யாரிடத்துப் போயுரைப்போம்
யார் துணையில் வாழ்ந்திருப்போம்
யார் நிழலில் குடியிருப்போம்
ஐயையோ காலமே!
ஆண்டவனே எங்கள் துயர்
ஆறாதே ஆறாதே!
அழுதாலும் தீராதே!

கவியாக.

மலர்வு
09.01.1969

உதிர்வு
19.09.1994

**செல்வன் ஆறுமுகம் அருள்மோகன்**

ஆத்மா சாந்தியடைய அனைவரும் இறைவனை பிரார்த்திப்போமாக.
இவர் பிரிவால் வாடும் குடும்பத்தினர். உறவினர்.
நீல நட்சத்திர விளையாட்டுக்கழக நண்பர்கள்.
மற்றும் அனைவர்க்கும் ஆறுதல் கூறி நிற்கும்........

பொன்னி நிறுவனம்
077 / 23 27 30.
Lausanne,
SWITZERLAND.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தாயின் மடியில்.
09
01
1969



மரணத்தின் பிடியில்
19
09
1994

ஆறுமுகம் அருள்மோகன்

**19.09.94 அன்று**
**அகால மரணமடைந்த**
**செல்வன் ஆறுமுகம் அருள்மோகன்**
**நினைவாக**
**கண்ணீர் அஞ்சலியை**
**செலுத்தி நிற்கின்றோம்.**

தமிழர் கலை கலாச்சார ஒன்றியம்.

*24.09.94 பி.ப. 4.00 மணிக்கு நடைபெறவுள்ள*
*கலைவிழாவில்*
*அமரர் ஆ.அருள்மோகன்*
*நினைவிலெழுந்த கண்ணீர் அஞ்சலி*
*நீல நட்சத்திர விளையாட்டுக் கழகத்தால்*
*காணிக்கையாக்கப்படும்.*

22.09.94 வியாழக்கிழமை காலை 09.00 மணிமுதல் 11.00 மணிவரை
பொது மக்கள் பார்வைக்காக அமரர் அருள்மோகனின் பூதவுடல்
MONTOIE ல் வைக்கப்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கரை தீபமொன்று கண்ணீர் அஞ்சலியில்......

இலங்கையில்
ஆண்டவன்
தந்தது
09.01.1969



சுவிற்சலாந்தில்
காலன்
பறித்தது
19.09.1994

ஆறுமுகம் அருள்மோகன்
நில நட்சத்திர விளையாட்டு கழக வீரன்.

# இறுதி அஞ்சலி

*19.09.1994 அன்று எம்மை விட்டுப் பிரிந்த எமது ஆருயிர் நண்பன்
ஆறுமுகம் அருள்மோகன் அவர்களின் பூதவுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக*
***22.09.1994 வியாழக்கிழமை அன்று காலை 8.00 மணி முதல் 10.00 மணி வரை***

***Av de Montoie-3, Lausanne. (Maladiere)*** *ல்
அமைந்துள்ள மண்டபத்தில் வைக்கப்படும்*

*Lausanne புகையிரத நிலையத்திலிருந்து* ***MALADIERE*** *நோக்கி செல்லும் 1 ம் இலக்க பஸ்வண்டியில்* ***MALADIERE*** *என்ற தரிப்பிடத்தில் இறங்கவும்.*

*St-Francois இல் இருந்து* ***MALADIERE*** *நோக்கி செல்லும் 4 ம் இலக்க பஸ்வண்டியில்* ***MALADIERE*** *என்ற தரிப்பிடத்தில் இறங்கவும்.*

*நில நட்சத்திர விளையாட்டுக் கழகம்.
லவுசான்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி.

NOS SINCERES CONDOLEANCES



*மலர்வு*
09.01.1969

*உதிர்வு*
19.09.1994

*ஆறுமுகம் அருள்மோகன்*
ARUMUGAM ARULMOHAN

**19.09.1994.** அன்று சுவிற்சலாந்தின் லவுசான் மாநிலத்தில் அகால மரணத்தை தழுவிக்கொண்ட எங்கள் அன்புச்சகோதரன் அருள்மோகனின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*நீல நட்சத்திர விளையாட்டுக் கழக நண்பர்கள்*
*லவுசான்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
09
01
69



உதிர்வு
19
09
94

அமரர் திரு ஆறுமுகம் அருள்மோகன்
அன்பும் பாசமும் அள்ளி வழங்கி
ஆதரித்த ஆருயிர் நண்பனே!

எம்மை எல்லாம் ஆறாத்துயரில்
அவலமுறவிட்டு பிரிந்து ஓடி —
மறைந்த நண்பனே!

உமது நினைவு எமது நெஞ்சில்
நிழலாய்த், நீங்காத்துயரில்
இங்கு நாம் நலிகின்றோம்.
கருணை வடிவான எமது நண்பனே!

உமது ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை
வேண்டுகின்றோம்

சாந்தி. சாந்தி. சாந்தி

Neuchatel.

உன் பிரிவால் துயருறும்
நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரை காணிக்கையாக்குகிறேன்

அன்னை மடியில்
1 - 1969

ஆண்டவன் மடியில்
19 - 9 - 1994

ஆறுமுகம் அருள் மோகன்
என் உயிர்த் தோழனே என் மோகனே நீ எங்கே போனாய்
காவிய நாயகனே என் அருள் மோகனே நீ எங்கே போனாய்
உனது செய்தி அறிந்து அசைவுற்று நின்றேன்னடா
வானத்தில் வட்டமிட்ட பறவைகள்
மரக்கிளைகளில் வந்து துயர கண்ணீர் விட்டதடா
கடல் அலைகள் இசை கீதங்கள் போட்டதடா
பாசமும் நேசமும் கலந்தோம் உறவுடன்
சொந்தங்கள் சேர்த்து விட்டு சொல்லாமல்
மண்ணுலகம் தான் வெறுத்து விண்ணுலகம்
சென்று போனீர்களே மோகன்
விண்ணுலகம் சென்றதனால் வழியறியாது தவிக்கின்றேன்
வாடி நிற்கும் எனக்காக ஓர் வார்த்தை
கூற மாட்டீர்களோ மோகன்
கண்ணுறக்கம் கொள்ள வில்லை மனமும் உறங்கவில்லை
தந்தையார் தவித்து நிற்க தாயாரும் ஏங்கி நிற்க
தோழர் நாம் துடித்து நிற்க
தொலை தூரம் போனாயோ மோகனே
புத் கள் கூறி நல்லவழி காட்டி விடுவாயே
இனி உன்னை போல் யார் தான் வருவார்கள்
நெருங்கிப் பழகி நெஞ்சத்தில் இணைந்தாய்
பழகிய காலம் தான் பாதியில் முடிந்தாலும்
இதயம் உள்ளவரை உன் நினைவு மறையாது
எனது பிறந்த நாளே எனக்கு ஞாபகம்
இருக்காதடா நீ உரிய காலத்தில் எனக்கு
வாழ்த்து மடல் மூலம் ஞாபக படுத்து வாயே
எங்கே போனாய் மோகனே
அடுத்த பிறப்பிலாவது எனது சகோதரனாகப்
பிறக்க இறைவனை வேண்டுகின்றேன்
அது வரை எனது கண்ணீரை
உனக்கு காணிக்கையாக்குகின்றேன்.

தோழன்
இ. ராகுலன்
கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



**ஆறுமுகம் அருள்மோகன்**
(மோகன்)

தாய் மடியில் 09. 01. 1969
இறைவன் அடியில் 19. 09. 1994

கரவெட்டி மேற்கு நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு ஆறுமுகம் - பூரணம் தம்பதிகளின் அன்புப் புதல்வன் அருள்மோகன் 19. 09. 94 அன்று சுவிசில் (லவுசானில்) அகால மரணமானார்.

இவர் திருமதி கோமதி ரவீந்திரனின் அன்புச் சகோதரன் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகனக்கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்புகட்கு : சிவா (சுவிஸ் - லவுசான்),
TEL:021/6461523, சேகர்(சுவிஸ்-JURA)TEL:039512508
ஆறுமுகம் (கொழும்பு) TEL: 330262
தகவல்: கே. குகன் (பாரிஸ்), TEL: 43 79 54 67

ஈழநாடு

## கலைவிழா ஒத்திவைப்பு

(பேர்ன்)
தமிழர் கலை கலாச்சார ஒன்றியத்தின் ஆதரவில் "தமிழொலி" வானொலி சேவையினர் நடத்தும் மூன்றாவது கலை விழா அடுத்த மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

சுவிஸ் நீலநட்சத்திர விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட வீரர் ஆ. அருள்மோகன் அகாலமரணமடைந்ததைத் தொடர்ந்து இவ்விழா ஒத்திவைக்கப்பட்டது. இவ்விழா கடந்த சனிக்கிழமை நடைபெறவிருந்தது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# விநாயகர் வணக்கம்

ஓங்குமொருமருப்பானை உயிர்க்குயிராயிருப்பானை உரகவேந்தன்
தாங்குநெடு நிலத்தானை முகத்தானை வகைத்தானைச்
சயிலமானைப்
பாங்கு வைத்து மழித்தானைப் பரித்தான் தந்தளித்தானைப்
பசும்பொற்கோட்டுப்
பூங்கமலப தத்தானைப் பொருவில் ஐந்து கரத்தானைப் போற்றல்
செய்வோம்

# பன்னிரு திருமுறை

திருச்சிற்றம்பலம்

### 1-ம் திருமுறை

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

### 2-ம் திருமுறை

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

### 3-ம் திருமுறை

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
யற்ற மறைப்பது முன்பணியே
அமரர்கள் செய்வது முன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே
பிரம புரத்தை யுகந்தனையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4-ம் திருமுறை

சலம்பூ வொடுதூப மறந்தறியேன்
தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்
நலந்தீங் கிலுமுன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
உடலுள் ளுறுசூலை தவிர்த் தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட் டானத் துறையம்மானே.

5-ம் திருமுறை

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

6-ம் திருமுறை

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற்கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே

7-ம் திருமுறை

பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போகமுந்திரு வும்புணர்ப் பானை
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழனத்தணி
ஆரூரானை மறக்கலுமாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8-ம் திருமுறை

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப் பதானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப்புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே என் கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

## 9-ம் திருமுறை

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## 10-ம் திருமுறை

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

## 11-ம் திருமுறை

இடர்களை யாரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் சுடருருவில்
என்பருக் கோலத் தெரியாரும் என்மானார்க்
கன்பனா தென்நெஞ் சவர்க்கு.

## 12-ம் திருமுறை

உலகெ லாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும்சாலப் பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந்திரிந்த செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்
தருளுவதினியே

## திருவிசைப்பா

புவனநாயகனே அகவுயிர்க்கமுதே பூரணா வாரணம் பொழியும்
பவளவாய மணியே பணிசெய்வார்க்கிரங்கும் பசுபதீ பன்னகா
பரணா
அவனி ஞாயிறு போன் றருள் புரிந்தடியேன் அகத்திலும் முகத்
தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலு மமர்ந்தாய் தனியனேன் தனிமை
நீங்குதற்கே.

## திருப்பல்லாண்டு

ஆரார்வந்தார் அமரர் குழாத்தி லணியுடை யாதிரை நாள்
நாராயண னொடு நான்முக னங்கி யிரவியு மிந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியுமாடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமலமூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப் போதில் வீற்றிருந்தருளி னானே.

## திருப்புகழ்

உம்பர் தரு தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேன்பருகி பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ACKNOWLEDGEMENT

We express our very sincere gratitude for Love and comfort given us by the Commissioner - General of Inland Revenue, Commissioners, Deputy Commissioners and the Staff of the Inland Revenue Dept, Friends and relations who paid their last respects to our beloved son ARUL MOGAN and for sending floral tributes, and condolence messages.

### OUR SPECIAL THANKS ARE DUE TO -

* The Doctors and staff of Chuv Canton Hospital Lausanne , Switzerland who tried their best to save his life.

* The members of the sports clubs, other associations and friends of our beloved son in Switzerland for all the assistance rendered by them in bringing the body to Sri Lanka.

* The Managers and Members of the Staff of Matthieu Biscuits, Ecublens and friends and well - wishers who paid their last respects at Av de Montoie - 3. Lausanne in Switzerland.

* The numerous well - wishers of our family who helped us in many ways upto the time of cremation of our beloved son's remains at Madampitiya, Colombo on the 29th Sept. 1994

**MAY ARUL MOGAN'S SOUL REST IN PEACE !**

**MR. & MRS. ARUMUGAM & FAMILLY**

82-2/47,SRI RAMANATHAN MAWATHA,
COLOMBO - 13.
TEL : 330262

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

1994 செப்டெம்பர் 19ம் திகதி சுவிற்சலாந்தில் அகால மரணமடைந்த எமது அன்புச் செல்வம் அருள் மோகனின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டு எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபச்செய்திகள், மலர் வளையங்கள் அனுப்பியோர்களுக்கும், மற்றும் பல வழிகளிலும் உதவிசெய்த நண்பர்கள் உற்றார் உறவினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இச் சந்தர்ப்பத்தில் கீழ்க் கண்டவர்களுக்கு முக்கியமாக எமது உளமார்ந்த நன்றி உரித்தாகும்:-

- லவுசான் மாநில வைத்தியசாலை, வைத்தியர்களுக்கும், ஊழியர்களுக்கும்.
- நீலநட்சத்திர விளையாட்டுக்கழக அங்கத்தவர்கள். லவுசான் மாநிலம் [சுவிஸ்]
- நொசத்தல் உதயசூரியன் விளையாட்டுக்கழக அங்கத்தவர்கள் [சுவிஸ்]
- சுவிஸ் தமிழ் கலை கலாசார ஒன்றியம்
- சுவிஸ் வாழ் நண்பர்கள் சிவா, குணம், செல்வா, ஸ்ரீ, மதன், சேகர், றோய், பென்சன் ஆகியோர் யாவருக்கும்.
- மத்தியூ பிஸ்கற் கம்பனி நிர்வாகிகள், ஊழியர்கள், சுவிஸ்.
- உள்நாட்டிறைவரி ஆணையாளர் நாயகம், மற்றும் ஆணையாளர்கள், பிரதி ஆணையாளர்கள், சகல ஊழியர்களுக்கும்.

1994 ஒக்டோபர் 19ம் திகதி கொழும்பில் நடைபெற்ற அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றிச் சிறப்பித்தோர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


**அருள் மோகனின் ஆத்மா சாந்தியடைவதாக!**
**சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**ச. ஆறுமுகம் குடும்பம்**

82-2/47, ஸ்ரீ இராமநாதன் வீதி, கொழும்பு - 13.
தொலைபேசி - 330262

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org